**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 85/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | கண்ணன் |
| Father's Name/Husband Name: | பாஸ்கர் |
| Village : | தேனூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 28/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா. அ.சா.2 எனது அம்மா. சம்பவம் நடந்த சமயத்தில் நான் வீட்டிற்கு வெளியில் படுத்து இருந்தேன். எதிரிகள் செந்தில், முத்துவேல் இருவரும் எங்களது வீட்டிற்கு வந்து வீட்டின் கதவை தட்டினார்கள். சத்தம் கேட்டு நான் பார்த்தபோது என் அம்மாவின் முடியை பிடித்து எதிரி முத்துவேல் வீட்டிற்கு வெளியே இழுத்து வந்தார். ஆஜர் எதிரிகள் என்னையும், என் அப்பா மற்றும் என் அம்மாவை அடித்தார்கள்.

எதிரி பெரியசாமி தென்னை மட்டையால் என் அம்மாவை அடித்ததில் வலது கை உடைந்துவிட்டது. நானும் எனது அம்மாவும் 108 ஆம்புலன்ஸ் மூலம் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும்படி சொன்னதால் நாங்கள் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிசிச்யையில்

சேர்ந்தோம். மறுநான் காலை என்னுடைய அப்பா எங்களுடன் சிகிச்சையில் சேரந்து கொண்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேனா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் நான் சிகிச்சையில் சேர்ந்தேன் என்ற விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியவில்லை என்றாலும், மருத்துவமனையில் நான் சிகிச்சையில் சேரவில்லை என்றாலும், போலிசாரிடம் சம்பவம் குறித்து நான் சொல்லவில்லை என்றாலும் சரியால்ல. அரியலூர் மருத்துவமனைக்கு சென்றதற்கான விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். அரியலூர் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு அன்றைய இரவே பெரம்பலூர் மருத்துவமனைக்கு சென்று விட்டோம் என்றால் சரியாக மறுநாள் விடியற்காலை 4-5 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். நாங்கள் சொல்வது போல் காயம் ஏதேனும் ஏற்பட்டு இருந்தால் ஏதேனும் ஒரு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்திருப்போம் என்றாலும், அவ்வாறு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றாலும் போட்டி வழக்கிற்காக தாமதமாக சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றால் சரியல்ல. எனது போலிசார் விசாரணையில் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், எனது பெற்றோர் சொல்லித்தான் சம்பவம் பற்றி எனக்கு தெரிந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நிலம் சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தின் மூலம் வந்து நிலத்தை அளந்தார்கள் என்றால் வந்தார்கள் ஆனால் அளக்க விடவில்லை. அந்த நிலத்தை அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.